Registered as a Newspaper

கண் பரிசோதிக்க எண்ணுகிறீர்களா?
மூக்குக்கண்ணாடி பெற வேண்டியுள்ளதா?
விரையுங்கள்!
V. T. & சன்ஸ்
இல.317, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(நியூ விக்ரேஸ் அருகாமை)

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை: ரூ. 1.25

இடம் மாற்றம்
பசிகட்ட விரும்புகிறீர்களா? உடன் நாடுங்கள்
V. T. & சன்ஸ்
பழைய முகவரி: 11, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
புதிய முகவரி: 317, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

சுடர்: 2 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு பங்குனி மீ 3 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1407 றஜப் பிறை 16 (17-03-1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY ஒளி: 94

★ சுற்றிவளைப்பு, தேடுதல்

# விசுவமடுப் பகுதியில் வானத் தாக்குதல்

## 10 அப்பாவிகள் பலி; உடைமைகளுக்கும் பெரும் சேதம்

-- அலுவலகச் செய்தியாளர்: கே. இரத்தினராஜசிங்கம் --

யாழ்ப்பாணம் மார்ச் 17

விசுவமடுப் பகுதியில் நேற்று விமான, ஹெலிக்கொப்டர் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இந்தத் தாக்குதல்களில் சிக்கி பத்துக்கும் அதிகமான அப்பாவிப் பொதுமக்கள் உயிரிழந்ததாக இங்கு கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பொதுமக்களின் உடைமைகளுக்கும் பெரும் சேதம் ஏற்பட்டிருக்கிறது.

இதே வேளை கிளிநொச்சி, பரந்தன் ஆனையிறவு இராணுவ முகாம்களில் இருந்து சென்ற ஆயிரத்துக்கும் அதிகமான சிப்பாய்கள் விசுமடுப்பகுதியில் சுற்றிவளைத்து கடும் சோதனையிட்டனர்.

நேற்றுக் காலை ஆறு மணி அளவில் நடைபவனியாகவும் கவச வாகனங்களிலும் சென்ற ஆயிரத்துக்கும் அதிகமான சிப்பாய்கள் இப்பகுதியில் சுற்றிவளைத்துக்கொண்டனர்.

இதேவேளை நான்கு குண்டுவீச்சு விமானங்களும் ஐந்து ஹெலிக்கொப்டர்களும் இப்பகுதியில் கடும் தாக்குதல் நடத்தின

தாக்குதலினால் பல வீடுகள் இடிந்து நொருங்கியதாகவும், பல எரிந்து நாசமானதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அப்பகுதிகளில் பின்னர் ஹெலிக்கொப்டர்களில் இருந்து சிப்பாய்கள் இறக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

இதேவேளை தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்ட சிப்பாய்கள் பொதுமக்களின் பல வாகனங்களையும் தம்முடன் எடுத்துச்சென்றாராம்.

விமானத் தாக்குதல்களினால் சேதமடைந்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே.....
ஜெய்ப்பூர்கால் தொழிற்சாலைக்கான உதவி நிதிக்கு நன்கொடை வழங்கியவர்களின் பட்டியல் 2 ஆம் பக்கம் பார்க்க.

**சுபநேரம்**

17-03-1987

செவ்வாய்க்கிழமை

சுபநேரம்:
10-50 முதல் 12-20 வரை
ராகுகாலம்:
3-20 முதல் 4-50 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்



முச்சந்தி முனி

பஞ்சாப்பையும் இலங்கையையும் ஒப்பிடுற வருக்கு பஞ்சாப். சிங் மூலம்தான் எச்சரிக்கை விட வேணும் எண்டு நல்ல முறையில் ராஜீவ் யோசித்திருக்கிறார்...!

# எரிபொருள் இன்று முதல் பங்கீட்டுக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 17

வடபகுதி மீது குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாடு மீது விதிக்கப்பட்ட எரிபொருள் தடை தளர்த்தப்பட்டிருக்கிறது.

அரசாங்கம் நேற்று மேற்கொண்ட முடிவின் பிரகாரம் பெற்றோல், டீசல் ஆகியன பங்கீட்டு முறையில் வழங்கப்படும்.

மண்ணெண்ணெய்க்குப் பங்கீடு இல்லையாயினும், யாழ் அரச அதிபரால் நியமிக்கப்படும் முகவர்களுக்கே அவை வழங்கப்படும்.

விறகு, எஞ்ஜின் ஒயில் ஆகியவை தாராளமாக விநியோகிக்கப்படும்

பெற்றோல், டீசல் என்பன வாரத்துக்கு ஒரு முறை பின் வரும் அளவில் பங்கீடு செய்யப்படும்.

1. தனியார் கார் – 3 கலன்
2. தனியார் வான்கள், லொறிகள் – 10 கலன்
3. உழவு யந்திரங்கள் – 5 கலன்
4. மோட்டார் சைக்கிள் – 1 கலன்

மோட்டார் வாகனப் பத்திரம், காப்புறுதிப் பதிவு, 1987 ஆம் ஆண்டுக்கான வரி அனுமதிப் பத்திரம் என்பனவற்றை

(4ம் பக்கம் பார்க்க)

## இணைப்பதிகாரிகள் நியமனம்

கொழும்பு மார்ச் 17

திருகோணமலை, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கு புதிய இணைப்பதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

அரியலூர் ரயில் விபத்து!

## ரெலோ முகாம் திருச்சியில் சோதனை

சென்னை மார்ச் 16

அரியலூர் ரயில்குண்டு வெடிப்புத் தொடர்பாக திருச்சிக்கு அருகில் உள்ள தமிழ் ஈழவிடுதலை இயக்க முகாம் ஒன்றைப் பொலிஸார் முற்றுகையிட்டு 75 பேரை விசாரணை

(4ம் பக்கம் பார்க்க)

எம். ஜி. ஆர். உத்தரவையடுத்து

## தமிழக அமைச்சர்கள் இருவர் பதவி நீக்கம்

சென்னை மார்ச் 16

தமிழ்நாடு அமைச்சர்கள் இருவர் அவர்களது பொறுப்புகளில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர்.

உள்ளூராட்சித் துறை தொழிலாளர் நலன் பேணல் அமைச்சர் திரு. கே. என். கிருஷ்ணசாமியும் வாரத்துறை அமைச்சர் திரு. ஆர். எம், ஜெகதீசனுமே அமைச்சர் பொறுப்புகளில் இருந்து விடுவிக்கப்பட்டவர்கள் ஆவர்.

தமிழ்நாடு முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன் விடுத்த உத்தரவையடுத்து இரண்டு அமைச்சர்களும் பதவியிலிந்து தமிழக ஆளுனரினால் விடுவிக்கப்பட்டனர்.

திரு. கே. எஸ் கிருஷ்ணசாமி வகித்த அமைச்சுப் பொறுப்புக்களை உணவுத்துறை அமைச்சர் திரு. எஸ் இராமச்சந்திரன் கவ

(4 ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய நடவடிக்கைகள் விவரம் மிக இரகசியம்!

புதுடில்லி, மார்ச் 16

தமிழ் மக்கள் மீதான இராணுவ நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு இலங்கை அரசாங்கத்தை நிர்ப்பந்திக்க எடுக்கப்படவுள்ள புதிய நடவடிக்கைகள் பற்றிய விவரத்தை இந்திய அரசு இரகசியமாக வைத்துள்ளது.

இன்னும் ஒரு வாரத்தில் இந்திய அரசின் புதிய உத்தியிலான நடவடிக்கைகள் வெளியாகும்.

அந்தப் புதிய உத்தி உண்மையில் நேரடியான தலையீடாக இருக்காது.

ஆனால் யாழ்ப்பாணத்தை முற்றுகையிட இலங்கைப் பாதுகாப்புப் படைகளை அனுமதிக்கப்போவதில்லை என்பதில் இந்தியா உறுதியாக இருக்கும்.

இந்த நிலையில் இந்திய ஏஜென்ஸிகளுக்கு தேவையான பணிப்புரைகளை பிரதம மந்திரி ராஜீவ் காந்தி நேரடி

(4ம் பக்கம் பார்க்க)

## தேடுதல் நடத்திய சிப்பாய்கள் காயம்

பரப்புக்கடந்தானில் சம்பவம்

யாழ்ப்பாணம், மார்ச் 17

தேடுதல் நடவடிக்கைக்குச் சென்ற சிப்பாய்கள் கண்ணி வெடியில் சிக்கியதால் இரண்டு சிப்பாய்கள் காயமடைந்தனர்.

மன்னார் பரப்புக்கடந்தான் பகுதியில் நேற்று இச்சம்பவம் நடைபெற்றது

நூற்றுக்கணக்கான சிப்பாய்கள் அப்பகுதியில் தேடுதல் நடத்தியபோது இரண்டு வீடுகளை அவர்கள் குண்டு வைத்து தகர்த்தனர்.

இதேவேளை அங்கு புதைக்கப்பட்டிருந்த கண்ணிவெடி ஒன்றும் வெடித்தது. இக்கண்ணி வெடியினால் இரண்டு சிப்பாய்கள் பலத்த காயமடைந்ததாக அரசு அறிவித்துள்ளது.

(உ-10)

## தினேஷ்சிங் வந்தது எச்சரிக்கை விடுக்க!

கொழும்பு, மார்ச் 17

இந்தியாவின் எச்சரிக்கைச் செய்தியே, சிறப்புத்தூதர் தினேஷ்சிங்மூலம் இலங்கைக்கு வழங்கப்பட்டது.

இப்படி கொழும்பு இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

பிரதமர் காந்தி தலைமையிலான அமைச்சரவையின் அரசியல் விவகார குழு எடுத்த முக்கிய முடிவின்படியே இந்த எச்சரிக்கை திரு தினேஷ்சிங் மூலம் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவிடம் கையளிக்கப்பட்டது

''இணக்கமான சூழ்நிலை ஒன்றைத் தோற்றுவிக்கும் தகவல் அல்ல அந்த விசேட செய்தி—'' இப்படி கொழும்பு இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன

(உ-எ)

# முல்லைத்தீவில் நேற்று மோதல்

யாழ்ப்பாணம், மார்ச் 17

முல்லைத்தீவில் நேற்று போராளிகளுக்கும் படையினருக்கும் இடையில் பலத்த மோதல் நடைபெற்றது.

நேற்றுக்காலை பத்து மணியளவில் முல்லைத்தீவு காட்டுப் பாதையூடாக வந்த சிப்பாய்கள் மீதே தாக்குதல் தொடுக்கப்பட்டது.

இம் மோதலின் போது சிப்பாய்கள் தரப்பில் ஏற்பட்ட சேத விவரம் பற்றி தெரியவில்லை. (உ-10)

## ரெலோவுக்கும் ரயில் குண்டுக்கும் தொடர்பு ஏதுமில்லை

அதன் தலைவர் அறிவிப்பு

சென்னை, மார்ச் 17

அரியலூர் ரயில் வெடிகுண்டு விபத்துக்கும் தனது இயக்கத்துக்கும் தொடர்பு இல்லை என்று தமிழ் ஈழ விடுதலை இயக்கத் தலைவர் திரு. செல்வம் நேற்று அறிவித்தார்.

''நாம் விருந்தாளிகளாக இந்தியாவில் தங்கியுள்ளோம். இந்த நிலையில் ரயிலுக்குக் குண்டு வைக்க நாம் கனவில்கூட திட்டமிடவில்லை''— என்றும் திரு. செல்வம் அறிவித்தார்.

வெடித்த குண்டு வெளிநாட்டு உற்பத்தி) என்பதில் சந்தேகமில்லை. இச்சம்பவத்துக்கும் போராளி இயக்கம் எதற்கும் தொடர்பு உண்டு என்று இப்போது கூறுவது முழுமையான தகவலாக இருக்காது–

இப்படி தமிழ் நாடு நாடு பொலீஸ் உயர் அதிகாரி திரு கே. ரவீந்திரன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழ் பேசிய சிலர், விபத்து நடந்த இடத்துக்கு அருகில் உள்ள கிராமம் ஒன்றுக்கு வந்து சென்றனர் என்ற தகவல் பொலீஸாருக்கு கிடைத்துள்ளதாக தெரியவந்துள்ளது.

இந்த நபர்கள் வெளிநாட்டு வானொலிகளையும் டேப் ரிக்கார்டர்களையும் விற்பனை செய்ய முயற்சித்ததாகவும்கூறப்படுகிறது.

இதனிடையில் பொ

(4 ஆம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணம் மீது

# இறுதித் தாக்குதலுக்கு அரச படைகள் தயாராகின்றனவாம்!

'இந்து'வில் ரெட்டி ஆருடம்

புதுடில்லி, மார்ச் 17

யாழ்ப்பாணம் மீது இறுதித் தாக்குதல் ஒன்றைத் தொடுக்க இலங்கை அரசு தனது ஆயுதப்படையினரை மீண்டும் தயார் செய்துவருகிறது.

புதுடில்லி அரசுக்கு கிடைத்துவரும் தகவல்கள் இதனை வலியுறுத்துகின்றன,

யாழ் குடாநாடு மீதான இராணுவத் தாக்குதலை இலங்கை அரசு நிறுத்தவில்லை; ஆனால் சொற்ப காலத்துக்கு அதன் வேகத்தை மட்டுமே குறைத்துள்ளது

அரசியல் நிலைமை தனக்குச் சாதகமாக வரும்போது முழு அளவிலான இராணுவத் தாக்குதல் ஆரம்பிப்பதே இலங்கை அரசின் திட்டம்.

'கிரெனடா' மாதிரியான ஆக்கிரமிப்பு ஒன்றை இலங்கையில் நடத்த இந்தியா திட்டமிடுகின்றது என்று கூறுவது தவறு.

ஆனால், அதற்கும் குறைவான ஒரு தலையீட்டின் மூலம் காட்டுமிராண்டித்தனமான அடக்குமுறையில்இருந்து தமிழரைக் காப்பாற்றவும்—

நிரந்தர அரசியல்தீர்வு மூலம் தமிழர் சட்டபூர்வ உரிமைகளைப் பெறவும் இந்தியா திடசித்தம் கொண்டுள்ளது-

—இப்படி திரு. ஜி. கே. ரெட்டி 'இந்து'வில் எழுதியிருக்கிறார். (உ-ஐ-எ)

## ஈரோஸ் பாலகுமார் தமிழகம் திரும்பினார்

ஈரோஸ் பிரமுகர் திரு பாலகுமார் தமிழ்நாடு திரும்பிவிட்டார்.

சில மாதங்களாக திரு. பாலகுமார் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்தார்.

தமிழ்நாட்டில் அரசு அதிகாரிகள் போராளி அமைப்புக்கள் மீது எடுத்த நடவடிக்கைகள் குறித்து வேதனை அடைந்த நிலையில் திரு. பாலகுமார் குடாநாட்டிற்கு வந்திருந்தார்.

இனப்பிரச்சினையில் தற்போது ஏற்பட்டுள்ள புதிய நெருக்கடியைத் தொடர்ந்து திரு பாலகுமார் மீண்டும் தமிழ்நாடு திரும்பி விட்டார்.

ஒரு சில தினங்களுக்கு முன்னர் அவர் தமிழ்நாடு திரும்பினார் என்று ஈரோஸ் வட்டாரங்கள் ஊர்ஜிதம் செய்தன.

(உ-எ)

# ஜீ. சீ. ஈ. சோதனையில் சாதனை; பெறுபேறுகள் குறித்து திருப்தி

யாழ்ப்பாணம், மார்ச் 17

யாழ் நகரில் நேற்று வெளியான ஜீ. சி. ஈ. பரீட்சை முடிவுகள் குறித்து அதிபர்களும், ஆசிரியர்களும், பெற்றோரும் திருப்தி தெரிவித்திருக்கிறார்கள்.

சாதனை எனக் குறிப்பிடும் அளவுக்கு அனேகமாக எல்லாப் பாடசாலைகளிலும் சிறந்த பரீட்சைப் பெறுபேறுகள் கிடைத்திருக்கின்றன. பரீட்சைக்குத் தோற்றியோரில் அதிக விதமானோர் சித்தியடைந்திருக்கிறார்கள்.

யாழ் நகரப் புறப் பாடசாலைகளில் பரீட்சை முடிவுகள் பின்வருமாறு:–

சென் ஜோன்ஸ்

சென் ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த 7 மாணவர்கள் எட்டுப் பாடங்களிலும் விசேட சித்தியடைந்துள்ளனர்.

நிரஞ்சன் புவனரட்ணம், விஜயரட்ணம் தேவகுமார், கணேசமூர்த்தி குகன், நடேசன் நரேந்திரன், நடேசபிள்ளை சபேசன், தம்பிப்பிள்ளை தவசேந்தன், துஷ்யந்தன் சதிசநாயகம் ஆகியோரே அந்த ஏழுபேருமாவர்.

மேலும் 6 மாணவர்கள் 7 பாடங்களில் விசேட சித்தியடைந்துள்ளனர்.

இக் கல்லூரியிலிருந்து பரீட்சைக்குத் தோற்றியவர்களில் 90 வீதமானோர் ஜீ. சி. ஈ. உயர்தரம் படிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

சுண்டுக்குளி

சுண்டுக்குளி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த 4 மாணவிகள் 8 பாடங்களிலும் விசேட சித்தி

(4ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

சின்னஞ் சிறு விளம்பரங்கள்

## தேவை

இயந்திர இயக்குநர்கள் தேவை ஹைடில்பேர்க் (Heidelberg) அச்சு இயந்திரத்தில் கடமையாற்றிய அனுபவமுள்ளவராக இருக்கவேண்டும். விளம்பர எண்: 55, மே/பா, உதயன், யாழ்ப்பாணம்.

கண்டெடுக்கப்பட்டது

50 100 2100 V இலக்க முள்ள ஸ்ரீ காந்தனின் அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டது. தொடர்பு: துரை. சண்முகராஜன், நாச்சிமார் கோயில், யாழ்ப்பாணம்


ஞாயிறுக்கு முன் நகைகள் விநியோகம் இல்லையேல்

# அடுத்த திங்கள் தொடக்கம் மீண்டும் மறியல் போராட்டம்

## விட்ட இடத்திலிருந்து தொடரும் என்கிறது அடகுவைத்தோர் சங்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 17

எதிர்வரும் 22ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமைக்கு முன் குறிப்பிட்ட நகைகள் கொழும்பில் இருந்து கொண்டுவரப்பட்டு விநியோகிக்கப்படாவிட்டால் 23ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் யாழ் செயலகம், மக்கள் வங்கிக் கிளைகள் முன்பாக மீண்டும் மறியல் போராட்டம் ஆரம்பமாகும்.

நகை அடகு வைத்தோர் சங்கம் மேற்கண்டவாறு தீர்மானம் நிறைவேற்றி உள்ளது.

நகை அடகு வைத்தோர் சங்கம் விடுத்த அறிக்கையின் சாரம் வருமாறு:-

அடகு வைத்தோர் சங்க விசேஷ பொதுக் கூட்டம் கடந்த 15ஆம் திகதி யாழ் மனோகரா திரையரங்கில் நடைபெற்றது.

சங்கச் செயற்குழு உறுப்பினர்கள் தற்போதைய நிலைப்பாடு பற்றியும் தொடர்ந்து எடுக்க வேண்டிய நடைமுறை பற்றியும் எடுத்துக் கூறினர்கள்.

அத்துடன் யாழ் மாவட்ட மக்கள் வங்கி பிராந்திய உதவி முகாமையாளரும் வருகை தந்து உரையாற்றினார்.

சென்ற இரண்டு தினங்களும் பலாலி இராணுவ முகாமில் வங்கி ஊழியர்களும் அடகு மீட்பு வாடிக்கையாளர்களும் எதிர்நோக்கிய சிரமங்களைப் பற்றி இவர் எடுத்துக் கூறினார்.

பணம் கட்டியும் இதுவரை மீளளிக்கப்படாத மிகுதி நகைகளைக் கொழும்பிலிருந்து இம்மாதம் 11ஆம் திகதிக்கிடையில் கொண்டுவந்து விநியோகம் செய்வதாக அளித்த வாக்குறுதிநிறைவேற்றப்படாதது குறித்து வங்கிப் பிராந்திய உதவி முகாமையாளர் பதிலளிக்கையில் தாங்கள் செய்யவேண்டிய வேலைகள் யாவும் பூர்த்தியாகி விட்டன என்றும் கொழும்பு நிர்வாகம்தான் தாமதமாக இருக்கிறதென்றும் தெரிவித்தார்.

இதே கருத்தையேதான் அரசாங்க அதிபரும் கூறியுள்ளார்.

ஆகவே இம்மாதம் 22ஆம் திகதிக்கிடையில் குறிப்பிட்ட நகைகள் கொழும்பிலிருந்து கொண்டுவந்து விநியோகம் செய்யப்படாதுவிடில் 23ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் விட்ட இடத்தில் இருந்து (யாழ் செயலகம் மக்கள் வங்கிக் கிளைகள்) மறியல் போராட்டம் தொடங்கும்.

தேவையேற்படின் சகல அரச அலுவலகங்களுக்கும் விஸ்தரிப்பதென பொதுச்சபை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

இம்முறை நகைகள் விநியோகம் ஆரம்பிக்கும் வரை மறியல் போராட்டம் நிறுத்தப்படமாட்டாது

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது (இ)

## மக்கள் முகம்

### சித்தன்கேணி இளைஞர் கழக நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 1

சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றக் கழகமும் சனசமூக நிலையமும் நடப்பாண்டு நிர்வாகிகளாக பின்வருவோரைத் தெரிவு செய்துள்ளது.

போஷகர்:- திரு. கே. அருணாசலம் தலைவர்:- கே. ஸ்கந்தராஜா உபதலைவர்: எஸ். சண்முகராஜா செயலாளர்: ரி. கேதீஸ்வரன் உபசெயலாளர்: கே. குலசீலன் தனாதிகாரி: பி. சதானந்தன் உபதனாதிகாரி: எம். தயாகரன் விளையாட்டு காரியதரிசி: எஸ். உதயணன் கலாசார பொறுப்பாளர்: வை உமாகஜேந்திரன் நூலக பொறுப்பாளர்: ஏ. கணநாதன் மேலதிக உறுப்பினர்கள்: எஸ். ஜனார்த்தனன், கே. அரிதாஸ் (ஓ)

### பயிற்சி நெறி

சுன்னாகம், மார்ச் 17

பாடசாலையிலிருந்து விலகியோருக்கான மோட்டார் இயந்திரவியல் தொழில் நுட்பப் பயிற்சிநெறி சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் ஏப்ரல் மாதம் கல்வித் திணைக்களத்தால் ஆரம்பிக்கப்படவுள்ளது (இ-27)

## விளையாட்டரங்கு

### "பொன் அணிகள் போர்" மாபெரும் போட்டியில் ஏற்படுத்தப்பட்ட சாதனைகள்

யாழ்ப்பாணம், மார்ச் 17

யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் அணிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணிக்கும் இடையே நடைபெற்ற "பொன் அணிகள் போர்" மாபெரும் போட்டியில் ஏற்படுத்தப்பட்ட சாதனைகள்

ஒரு இன்னிங்சில் ஆகக் கூடுதலான ஓட்டங்களான 270 ஓட்டங்களை (7 விக்கெட்டுக்களை இழந்து) பெற்றது. முன்னர் இருந்த சாதனை 254 ஓட்டங்கள்.

7 ஆவது விக்கெட் ஜோடியான பி ஆதவன், எம் ஆர். மோகன் இணைந்து பெற்ற 79 ஓட்டங்கள்.

முன்னர் இருந்த சாதனை 77 ஓட்டங்கள்.

நான்கு ஜோடி ஆட்டக்காரர்கள் 50 இக்கும் அதிக ஓட்டங்களைப் பெற்றது

அந்த ஜோடி ஆட்டக்காரர்கள்: 1. ஜி எஸ். சவரிமுத்து – வி ஆர் திலக்ராஜ். 2. வி ஆர் திலக்ராஜ் – ஆர். பி சவுந்தரநாயகம், 3 ஜி எஸ் சவரிமுத்து – ஏ எம். நிமல்ராஜ். 4 பி ஆதவன் – எம். ஆர். மோகன்

விக்கெட் காப்பாளர் எம். பி. பணஸ்ரர் 3 கட்சுக்களைப் பிடித்து சாதனையை சமப்படுத்தினர் (இ-7)

### சுழிபுரத்தில்

வட்டுக்கோட்டை, மார்ச் 17

வட்டுக்கோட்டை வட்டார வருடாந்த மெய்வல்லுநர் போட்டிகள் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் இன்றும் நாளையும் அதாவது 17 ஆம், 18ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன

17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பெண்களுக்கான சகல பிரிவுப் போட்டிகளும் 13 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான போட்டிகளும் நடைபெறும்.

18ஆம் திகதி புதன்கிழமை 13 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கான சகலபோட்டிகளும் நடைபெறும். (இ-161)

### தொல்புரத்தில்

வட்டுக்கோட்டை, மார்ச் 17

தொல்புரம் விக்கினேஸ்வரா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இம்மாதம் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெறும். (இ-161)

### முதலியார் இல்லம்

மானிப்பாய், மார்ச் 17

நவாலி மகாவித்தியாலய இல்லங்களுக்கிடையிலான போட்டிகளில் முதலியார் இல்லம் முதலாம் இடத்தையும், பண்டிதர் இல்லம் இரண்டாம் இடத்தையும், புலவர் இல்லம் மூன்றும் இடத்தையும் பெற்றன. (இ)

### பூநகரியில்

பூநகரி, 17

பூநகரிப் பகுதியில் உள்ள கௌதாரிமுனை அ.த.க பாடசாலை ஞானிமடம் அ த க பாடசாலை ஆகியன இணைந்து நடத்தும் மெய்வல்லுநர் போட்டி இன்று 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பூநகரி உதவி அரசாங்க அதிபர் திரு. கே பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் (இ-161)

### நாவலர் இல்லம்

சாவகச்சேரி, மார்ச் 17

சரசாலை சிறீ கணேச வித்தியாசாலையின் வருடாந்த இல்லங்களுக்கிடையிலான மெய்வல்லுநர்கள் போட்டிகளில் நாவலர் இல்லம் முதலாமிடத்தையும், விபுலானந்தர், இராமநாதன் இல்லங்கள் முறையே 2ஆம், மூன்றும் இடங்களையும் பெற்றன. (இ-131)

எரிபொருள் தட்டுப்பாட்டால்

## அனலைதீவில் விவசாயம் பெருமளவு பாதிப்பு

அனலைதீவு, மார்ச் 16

எரிபொருள் தட்டுப்பாட்டால் அனலைதீவில் விவசாயம், வாழ்க்கைச் செலவு போக்குவரத்துகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன.

மிளகாய், காய்கறி, புகையிலை ஆகியன அதிகமாக உற்பத்தியாகும் இத்தீவில் மண்ணெண்ணெய்த் தட்டுப்பாட்டால் நீரிறைக்கும் இயந்திரங்களை இயக்கமுடியாதுள்ளன.

விவசாயிகள் தங்கள் விவசாயத்தை தொடர்ந்து செய்ய முடியாது கஷ்டப்படுகிறார்கள். சிலர் பழைய முறைப்படி துலாப் போட்டு நீரிறைக்கிறார்கள்

பொருட்களை ஏற்றி இறக்கும் வாகனப் போக்குவரத்து குறைந்ததால் விலைவாசி பன்மடங்காகி விட்டது டீசல் தட்டுப்பாட்டால் ஒரேயொரு மோட்டார் வள்ளச் சேவை மட்டும் நடைபெறுகிறது

அதனால் கூடிய கட்டணமும் அறவிடப்படுகிறது தீவு மக்கள் பிரயாணத்தில் கூடிய காலத்தையும் அதிக பணத்தையும் செலவிட வேண்டியுள்ளது. (இ-ரி)

மீனவர்களை விடுவித்ததற்காக

## திருமலை பிரசைகள் குழு புலிகளுக்கு நன்றி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 17

மூன்று சிங்கள மீனவர்களையும் நல்லமுறையில் பராமரித்ததற்கும் விடுவித்ததற்கும் திருகோணமலை பிரசைகள் குழு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு தனது நன்றியைத் தெரிவித்துள்ளது.

இது சம்பந்தமான அறிக்கையில் பிரசைகள் குழுவின் இணைச் செயலாளர்களான வண பிதா பீற்றர் குருகுல ஆராச்சி, திருமதி பாஷினி வரதன் ஆகியோர் கையெழுத்திட்டனர். (உ-எ)


விக்ஞ டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

[O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே ஒரு நிறுவனம்]

— 10 வருட சேவை —

ஆரம்பம்: 19-03-1987

பிரிவு - 4 O/L DAY CLASSES 8-30 - 1-30

EVENING CLASSES 2-45 - 4-45

9-ம், 8-ம், 7-ம், 6-ம், 5-ம் வகுப்புகளும் ஆரம்பமாகின்றன

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர்குழு:

* கணிதம்:- திரு. தயாபரன்
* ஆங்கிலம்:- திரு. விஸ்வநாதன்
* விஞ்ஞானம்:- திரு. சூரி
* தமிழ் சமயம்:- திரு திருப்பதி
* சமூகக்கல்வி, வர்த்தகம்:- திரு. கருணாகரன்

மு. குறிப்பு:- I. கடமை, கட்டுப்பாட்டுடன் நடத்தும் ஒரே ஒரு நிறுவனம்.

II. பெறுபேறுகள் குறைந்திருப்பின் கவலைப்பட வேண்டாம். எமது நிறுவனம் நிச்சயம் இதற்குக் கைகொடுக்கும்


## நூல்களை எறிந்துவிட்டு தளபாடங்களை எடுத்துச்சென்ற சிப்பாய்கள்

பூநகரி, மார்ச் 17

நூலகம் ஒன்றினுள் இருந்த நூல்களைத்தையும் வெளியே எடுத்தெறிந்து விட்டு நூலகத் தளபாடங்களைத் தமது தேவைக்கு எடுத்துச் சென்றனர் சிப்பாய்கள்

இச்சம்பவம் பூநகரியில் நிகழ்ந்தது.

பூநகரி இராணுவ முகாமிற்கு முன்னாக வுள்ள யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபையின் பூநகரி உப-அலுவலக நூலகத்துக்கே இக்கதி ஏற்பட்டது

இதேபோல் சிப்பாய்கள் பூநகரி உப-அலுவலக ஆயுர்வேத வைத்தியசாலையில் இருந்த தளபாடங்களையும் எடுத்துச் சென்றனர்.

இதனால் இங்கு சிகிச்சை பெற வரும் நோயாளிகள் இருப்பதற்குக்கூட இருக்கையின்றி அவதிப்படுகிறார்கள். (இ-ள)

## விளையாட்டிலும் மாணவர் அக்கறை கொள்வது அவசியம்

உடுப்பிட்டி, மார்ச் 17

ஒவ்வொரு மாணவரும் எவ்வாறு கல்வியில் அதிக அக்கறை கொண்டுள்ளனரோ அதேபோல் விளையாட்டிலும் அதிக அக்கறைகொள்ள வேண்டும்.

கரவெட்டி ஹாட்லிக் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன

பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய நெல்லியடி கோட்டக் கல்விபதிகாரி திரு வீ. தம்பிராசா மேற்கண்டவாறு கூறினார். கல்லூரி அதிபர் திரு வி. செல்வநாயகம் தலைமையில் வைபவம் நடைபெற்றது.

அருட்திரு தேவநாயகம் அடிகளார், உடுப்பிட்டி வட்டாரக் கல்வி அதிகாரி திரு வீ கே ஈஸ்வரபாதம், கொத்தணி அதிபர் திரு சிவபாதசுந்தரம் ஆகியோர் உட்பட பலர் உரையாற்றினர்கள்.

திருவாட்டி தம்பிராசா வெற்றிபெற்ற வீரர்களுக்கும், இல்லங்களுக்குமான பரிசில்களை வழங்கினார். (இ-157)

## மெய்வல்லுனர் போட்டிகள் நாட்டுக்குத் தகுதியான பிரசைகளை உருவாக்குகின்றன

இளவாலை, மார்ச் 17

மெய்வல்லுனர் போட்டிகள் மாணவர்களுக்கு எதனையும் தாங்கும் வீர உள்ளத்தையும் சுகமுள்ள உடல் நலத்தையும் கொடுத்து நாட்டுக்குத் தகுதியான பிரசைகளை உருவாக்குகின்றன.

இளவாலை சென் ஹென்றிஸ்- கன்னியர் மடம் மகா வித்தியாலயங்கள் ஒன்று சேர்ந்து நடத்திய மெய்வல்லுனர் போட்டியில் பிரதம விருந்தினராகப் பங்கு பற்றிய காங்கேசன்துறை வட்டாரக் கல்வி அதிகாரி திரு பீ. சிவஞானசுந்தரம் மேற்கண்டவாறு கூறினார்.

அதிபர் அருட் திரு அ. இராசநாயகம் அடிகள் தலைமையில் விழா நடந்தது.

அதிபர் அருட்திரு அ இராசநாயகம் அடிகள் பேசும்போது இளவாலையில் மெய்வல்லுனர் போட்டி நடக்கும் இதே நேரம் மறுபக்கத்தில் பயங்கரமான உள்நாட்டுப் போர் நடக்கும் சத்தமும் கேட்டுக் கொண்டிருக்கிறது என்றார்.

கன்னியர் மட அதிபர் அருட்செல்வி விக்ரறின் பேசும் போது "போட்டி மைதானம் ஒரு சிறந்த பயிற்சிக்கூடம்" என்றார்.

திருமதி சிவஞானசுந்தரம் வெற்றிக்கேடயங்களையும் பரிசில்களையும் வழங்கினார். (இ-48)

## கலை, கலாசாரம் மூலம் கிராம மக்கள் தமது அறிவை வளர்க்க வேண்டும்

### திறப்பு விழாவில் உரை

யாழ்ப்பாணம், மார்ச் 17

கலை கலாசார நிகழ்ச்சிகளில் ஈடுபடுவதன் மூலம் கிராம மக்கள் தமது அறிவை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

யாழ் அபிவிருத்திச் சபை அதிகாரமளிக்கப்பட்ட தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பணிமனை உத்தியோகத்தர் திரு. வ. பாலசுப்பிரமணியம் மேற்கண்டவாறு கூறினார்

குளமங்கால் மல்லாகம் சுவாமி ஆபிரகாம் சனசமூக நிலைய புதிய கட்டடத்தை திறந்து வைத்துப் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில்,

சனசமூக நிலையங்கள் போன்ற இயக்கங்களால்தான் இன்றைய நெருக்கடியான காலகட்டத்தில் கிராமங்களை நல் வழியில் நடத்திச் செல்லமுடியும் என்றார்

யாழ் புனித சம்பத்திரிசியார் குருத்துவக் கல்லூரி விரிவுரையாளர் அருட்தந்தை சி. எட்வின் சுவாமி ஆபிரகாமின் உருவப் படத்தை திரைநீக்கம் செய்து வைத்தார்.

விழாவிற்கு சுவாமி ஆபிரகாம் சனசமூக நிலையத் தலைவர் திரு ச பிரான்சிஸ் சேவியர் தலைமை வகித்தார்.

சனசமூக நிலையப் போஷகரும் குளமங்கால் பங்குத்தந்தையுமான அருட்திரு எம்.ஏ யேசுராசா உரையாற்றுகையில்;

மறைந்த சுவாமி ஆபிரகாம் அடிகள் இப்பகுதி மக்களுக்கு பங்குத்தந்தையாக மட்டுமல்லாது ஒரு தொண்டனாகவும் பணியாற்றியவர் என்றார்.

மல்லாகம் பிரசைகள் குழுத்தலைவர் திரு சி. சிறீதரன். திரு ஆ வ. [illegible] திரு. பெ. தவராசா. [illegible] ஆகியோரும் உரையாற்றினர். (இ-வ)

## பலாலி விமான நிலைய உபமின் நிலையம் மீண்டும் எரிந்து போகும் நிலையில்

காங்கேசன்துறை, மார்ச் 17

பலாலி விமான நிலைய சந்தியில் உள்ள உபமின் நிலையம் சட்டவிரோத மின் பாவனை காரணமாக எரிந்து விடக்கூடிய அபாய நிலையில் இருந்து வருகிறது

இந்த உபமின் நிலையத்தின் மின்மாற்றி அண்மையில் எரிந்தததை அடுத்து பலத்த சிரமத்தின் மத்தியில் புதிய மின்மாற்றி இணைக்கப்பட்டது.

ஒரு மாத காலமாக இருளில் மூழ்கியிருந்த வயாவிளான், பலாலி போன்ற பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப்பட்டது.

ஆனால் தற்போது சட்டவிரோத மின் பாவனை இப்பகுதியில் அதிகரித்துள்ளதால் அதிக மின் பழு ஏற்பட்டு இந்த மின்மாற்றி மீண்டும் எரிந்து விடக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது

அடிக்கடி சென்று பழுதுபார்க்க முடியாது இராணுவ முகாம் பகுதியில் அமைந்துள்ள இந்த உபமின் நிலையம் பழுதடையாமல் இருக்க பொதுமக்கள் ஒத்துழைப்பு நல்க வேண்டுமென மயிலிட்டி உப அலுவலக மின் அத்தியட்சகர் திரு வி. இரங்கநாதன் கோரியுள்ளார். (இ-68)

## முழங்காவிலில் முகாம் அமைக்க முயற்சி

முழங்காவில், மார்ச் 17

முழங்காவில் பகுதியில் இராணுவத்தினர் புதிய முகாம் அமைக்கக் கூடும் என அப்பகுதி மக்கள் அச்சம் கொண்டுள்ளனர்

கடந்த சில தினங்களாக முழங்காவில் பகுதிகளில் இராணுவத்தினர் நடத்திக் கொண்ட விரத்தையிட்டே மக்கள் இவ்வாறு எண்ணுகிறார்கள்.

இதனால் இப்பகுதி மக்கள் [illegible] இடம் பெயர்ந்து வேறு இடங்களுக்குச் செல்கிறார்கள்.

சில தினங்களுக்கு முன்னர் இராணுவத்தினர் இலுப்பைக்கடவை முகாமில் இருந்து நடைபவனியாக பாலியாறுவரை வந்தனர்.

இவர்களின் பாதுகாப்புடன் வந்த கவசவாகனச்சிப்பாய்கள் வெள்ளாங்குளம்வரை வந்து திரும்பினர்.

இதேபோல் கடந்த வாரமும் சுமார் 75 இராணுவத்தினர் முழங்காவில் முருகன் கோவில்வரை கவசவாகனம் ஜீப் வண்டிகள் சகிதம் வந்துபோயுள்ளனர். (இ-ள-ரி)

## ஜெய்ப்பூர் கால் தொழிற்சாலைக்கான உதயன் - சஞ்சீவி உதவி நிதி

உதயன் – சஞ்சீவி ஆரம்பித்த ஜெய்ப்பூர் கால் தொழிற்சாலைக்கான உதவி நிதிக்கு வாசகர்களும், அபிமானிகளும் அள்ளி அள்ளி வழங்குகிறார்கள். பலர் நேரில் வந்து தமது அன்பளிப்பைச் செலுத்துகிறார்கள். நீங்களும் அவ்வாறே செய்து பாதிக்கப்பட்டவர்களுக்குப் புது வாழ்வு அளிக்க உதவுங்கள்.

மேற்படி நிதிக்கு நன்கொடை வழங்கியவர்களின் நாலாவது தொகுதிப் பட்டியலைக் கீழே காணலாம்.

| இல. | பெயர், முகவரி | ரூபா சதம் |
|---|---|---|
| | ஏற்கனவே சேர்ந்த தொகை | 23,073-12 |
| 32 | திரு சி. சாந்தகுமார் 17, நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம். | 50-00 |
| 33. | திரு எஸ். நவநீதன் அச்சுவேலி | 500-00 |
| 34. | வல்லியம்பிள்ளை- இராஜதுரையின் ஞாபகார்த்த அன்பளிப்பு வசந்தா ஸ்ரோர்ஸ், ஊர்காவற்றுறை | 500-00 |
| 35 | ஓர் அன்பர் ஏழாலை தெற்கு, ஏழாலை | 250 00 |
| 36. | பலாலி மரியன்னை மன்றத்தினர் பலாலி | 500-00 |
| 37. | செல்வி உமா சிவானந்தசுந்தரம் வியாபாரிமூலை, பருத்தித்துறை | 500-00 |
| 38 | திரு த. பிருதிவிராஜ், குட்லக் எம்போரியம் 300, கே. கே எஸ் வீதி, யாழ்ப்பாணம். | 1,000-00 |
| 39 | ஊழியர் நலன்புரிச் சங்கம், ஹட்டன் நாஷனல் வங்கி லிமிட்டெட் யாழ்ப்பாணம் | 3,000-00 |
| 40. | திரு. வ. தங்கேஸ்வரன் வீரமாணிக்கதேவன் துறை, பயிலிட்டி | 50-00 |
| | மொத்தம் | 29 423-12 |

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

பூவைக் கையில் எடுத்தால் வாசனையை அறிவது போலவும், கல்லின் மீது சந்தனக் கட்டையைத் தேய்த்தால் மணத்தை முகர்வது போலவும், கடவுளைப் பற்றி எப்போதும் நினைப்பதால் ஆத்மீக விழிப்பு ஏற்படும்.

— அன்னை சாரதாதேவி

உதயன்

இல, 15, திருவள்ளுவர் சாலை தொலைபேசி: 24805
மின்சார நிலைய வீதி, 22078
யாழ்ப்பாணம் 17-03-1987 த.பெ. இல 55

# நோய் அபாயமும் அரசு அடாவடிகளும்

குடாநாட்டின் பல பகுதிகளிலும் சிரங்கு - சொறி நோய் வேகமாகப் பரவி வருவதாகச் செய்திகள் கிடைக்கின்றன.

இந்த நோய் சாதாரண தோல் வியாதி மட்டுமல்ல. சிறுநீரகம் போன்ற உடல் உள் அவயவங்களைப் பாதித்து ஆபத்தான நோய்களுக்கு உடந்தையாக இருக்கக்கூடிய பயங்கரமானதும் ஆகும்.

இது தொற்று நோயாக இருப்பதால், வேகமாகப் பரவி மக்களின் பெரும்பாலானவரைத் தாக்கக் கூடிய ஆபத்து உண்டு.

ஆகையால் சிரங்கு - சொறி வியாதியை, மலேரியா, அம்மை, வாந்திபேதி ஆகிய ஆபத்தான தொற்று வியாதிகளின் வரிசையில் வைத்துத் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் அவசியம்.

தனிநபர் சுகாதாரம் பேணப்படாமையே சிரங்கு-சொறி உண்டாகவும் பரவவும் பிரதான காரணங்கள் என்று வைத்திய சுகாதார வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மற்றும் மலசலகூட வசதி, தண்ணீர் வசதி இல்லாமையும் இந்நோய் உண்டாகக் காரணங்கள் ஆகும். அடிப்படைச் சுகாதார வசதிகள் இல்லாத இடங்களில் மக்கள் அடர்ந்து வாழும் போதும் இந்நோய் இலகுவில் உண்டாகிறது; பரவுகிறது.

போஷாக்கின்மையும் இந்நோய் விரைவில் தொற்றிக் கொள்வதற்கு ஒரு பிரதான காரணி.

வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள, பொருளாதார வசதி குறைந்த மக்கள் மத்தியிலேயே சிரங்கு நோய் வேகமாகப் பரவி வருவதாகச் சுகாதார அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். அதாவது இந்த நோய் பரவுவதற்கு சமூக பொருளாதாரக் காரணிகளும் உள்ளன என்பதாகும்.

வெயில் காலம் தொடங்கி விட்டது. வரட்சி வரும் காலம் நெருங்குகிறது. அதனால் சிரங்கு நோய் மேலும் பரவும் சாத்தியம் உண்டு.

சுகாதாரப் பகுதியினர் சிகிச்சை, தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். நோய் தடுப்பு சிகிச்சை முறைகளை உரிய விதத்தில் பின்பற்றத் தெரியாதவர்களும் இருக்கலாம். அவர்களுக்கு உதவும் தொண்டர்களாக அந்தந்தப் பகுதியில் உள்ள படித்த இளைஞர்களும் யுவதிகளும் மாறவேண்டும்.

இதே வேளை—

அகதி முகாம்கள் இப்போது எமது மண்ணில் நாளாந்தம் அதிகரித்து வருகின்றன. நேற்று வசதியுடன் இருந்தோர் இன்று அகதிகளாகக் காணக் கூடிய அவலம்.

அதன் விளைவாக மக்களில் பலர் இடம் பெயர்வு. தொழில் இழப்பு. வருமானம் தடைப்படுதல். உணவுக்குக் கஷ்டம். போஷாக்கில் கவனம் செலுத்த வசதியில்லாமை இவ்வாறு பல பக்க விளைவுகள் உண்டாகின்றன.

அகதி முகாமுக்குப் போகாது உறவினர்களுடன் சேர்ந்து வசித்தாலும் கூடப் பல பக்கத் தாக்கங்கள் இருக்கவே செய்கின்றன.

ஒரு வீட்டில் வசிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதால் அடிப்படை வசதிகள் மற்றும் சுகாதார வசதிகள் குறைந்து போகும் பாதிப்பு உண்டு.

அதன் காரணமாக அகதிகள் மட்டுமன்றி அகதிகளாகாத உறவினர்களின் பொருளாதாரம் மற்றும் சுகாதாரத் தேவைகளும் சரிவரப் பூர்த்தி செய்யப்பட முடியாத நிலை உருவாகிறது.

மொத்த விளைவு சமூக—பொருளாதார மட்டத்தில் ஓரளவு பரவாயில்லை என்று இருந்தவர்களும் வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள மக்களின் நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்.

கூட்டு மொத்தமாக அரசியல் குழப்பநிலையால், அடாவடித்தனங்களால் தமிழ் மக்களின் சமூக- பொருளாதார நிலை பெருமளவில் ஆட்டம் காண்கிறது. அதன் பெறுபேறாக கல்வி, சுகாதாரம் உட்படப் பல துறைகளிலும் அவர்கள் பாதிக்கப்படுகிறார்கள்.

சிரங்கு நோய் அபாயமும் அதில் ஒன்றெனலாம். சிறுவர்களையே அது அதிகம் பாதிப்பதால் வெறும் நோய்ச் சிகிச்சையோ அல்லது நோய்த் தடுப்போ ஆபத்தை முற்றாக நீக்காது.

சிரங்கு நோய்க்கென மட்டுமன்றி பொதுவாக நோய் அபாயத்தைப் பூரணமாக நீக்குவதற்கு வசதி குறைந்த மக்களின், அகதிகளாகிவிட்ட மக்களின் சமூக - பொருளாதார நிலை உயர்த்தப்படுவது மிக அவசியம்.

உணவு முத்திரையையும், நிவாரணப் பொருள்களையும் நம்பியிருக்கும், அவற்றிலேயே தங்கியிருக்கும் மக்கள், அடிப்படைச் சுகாதார வசதிகளையோ, கல்வி வசதிகளையோ எப்படித் தாமாகவே ஏற்படுத்திக் கொள்ள முடியும்?

எனவே வறுமைக் கோட்டுக்குக் கீழான வாழ்க்கை நிலையில் உள்ளவர்களையும், அகதிகளையும் சமூக- பொருளாதார நிலையில் உயர்த்துவது குறித்துக் காலம் தாழ்த்தாமல் கவனம் செலுத்தப்பட வேண்டும். அதனை ஒரு தேசியப் பணியாகத் தொடங்க வேண்டும்.

## இந்தோனேஷியாவில் தேர்தலுக்கு அச்சுறுத்தல்

ஜாகார்த்தா, மார்ச் 16

இந்தோனேஷியாவில் அடுத்தமாதம் நடைபெறவிருக்கும் தேர்தலுக்கு தீவிரவாதிகளின் நடவடிக்கைகள் பெரும் அச்சுறுத்தலாக அமையக் கூடும்.

இவ்வாறு இந்தோனேஷியா ராணுவ தளபதி எச்சரிக்கை செய்துள்ளார்.

அடுத்த மாதம் 23ஆம் திகதி நடைபெற விருக்கும் தேர்தலுக்கு கம்யூனிஸ்ட்டுகளும் வலது சாரி தீவிரவாதிகளும் பலத்த எதிர்ப்பு தெரிவித்து வருவதாகவும் அதனால் தேர்தலைக் குழப்பக் கூடிய விதத்தில் அவர்களது திட்டங்கள் இருக்கலாம் எனத் தான் நம்புவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மின் விநியோகம், குடிநீர் விநியோக நிலையங்கள், சந்தைகள் போன்ற பொது இடங்களில் நாசவேலைகள் மேற்கொள்ளப்படலாம் என்றும் இவர் தெரிவித்தார். (ஒ)

## வெளி உலகில்

### தாய்லாந்தில் கெரில்லாக்கள் சரண்

பாங்கொக் மார்ச் 16

தாய்லாந்தில் தடை செய்யப்பட்டிருந்த மலாய கம்யூனிஸ்ட் கட்சியில் மிஞ்சியிருந்த உறுப்பினர்களும் தமது ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டு விட்டு அரசாங்கத்திடம் சரணடைந்துள்ளனர்.

89 கெரில்லாக்கள் நாடுகளில் இருந்த மறைவிடங்களை விட்டு வெளியேறி நேற்று பொலீஸாரிடம் சரணடைந்தனர். 200க்கும் அதிகமான நவீனரக துப்பாக்கிகளையும் இவர்கள் பொலீஸ் அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

மலேஷியத் துருப்புக்கள் 1960ஆம் ஆண்டு இவர்களை தாய்லாந்து பிரதேசத்திற்குள் விரட்டியடித்ததிலிருந்து மலாயா கம்யூனிஸ்ட் கட்சி கெரில்லாக்கள் 27 வருடங்களாக கோலாலம்பூருக்கு எதிரான கிளர்ச்சி நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தனர். (ஒ)

### ஆராய்ச்சி மாணவன் மரணம்

மதுரை, மார்ச் 16

விஞ்ஞான கூடத்தில் ஆராய்ச்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சமயம் ஆராய்ச்சிக்கு பயன்படுத்தப்பட்ட நச்சு இரசாயன திராவகத்தை விழுங்கியதால் ஆராய்ச்சி மாணவன் ஒருவன் உயிரிழந்தான்.

இச் சம்பவம் மதுரை காமராஜர் பல்கலைக் கழக விஞ்ஞான கூடத்தில் அண்மையில் இடம் பெற்றது.

சோதனைக் குழாய்க்குள் பிப்பட் மூலம் மெர்குரி குளோரைட் திராவகத்தை வாயினால் உறிஞ்சி செலுத்த முயற்சித்த சமயம் அத் திராவகத்தின் சிறு துளியை மாணவன் விழுங்கிவிட்டான்.

வழமையில் இப்படியான ஆராய்ச்சிகளின் போது ரப்பர் குழாய் மூலம் திரவங்களை சோதனைக் குழாயினுள் மாணவர்கள் செலுத்துதல் வேண்டும். (இ-எ)

# பாகிஸ்தான் ஜனாதிபதியை கவிழ்க்கச் சதி?

## ஜெனரல்கள் இருவர் பதவி நீக்கம்!

இஸ்லாமாபாத், மார்ச் 16

பாகிஸ்தான் ஜனாதிபதி ஸியா - உல்-ஹக்கைப் பதவியிலிருந்து கவிழ்க்கும் சதி முயற்சி மேற்கொள்ளப்பட்டதா?

இவ்வாறான பலத்த சந்தேகம் இஸ்லாமாபாத்தில் நிலவி வருவதாகவும், எதிர்க்கட்சிகள் ஒன்றுசேர்ந்து ஜனாதிபதி ஸியாவின் நெருங்கிய சகாக்களை இத்திட்டத்திற்கு உடந்தையாக இருந்தனர் என்று தெரிவித்திருப்பதாகவும் காபூல் வானொலி அறிவித்தது.

இதேசமயம் இராணுவ முக்கியஸ்தர்கள் இருவரைப் பதவிநீக்கம் செய்துள்ளதாக பாகிஸ்தான் தெரிவித்தது.

ஜெனரல் ரகுமுதீன் கான் ஜெனரல் அரிஸ் ஆகிய இருவரும் இராணுவத்தில் மிகவும் உயர் பதவி வகித்து வந்தவர்கள் அத்துடன் ஜனாதிபதி ஸியாவின் நெருங்கிய ஆதரவாளர்களாகவும் திகழ்ந்தவர்கள் என மேலும் தெரிவித்த பாகிஸ்தான் இவர்கள் பற்றி மேலதிக விபரங்கள் எதனையும் வெளியிடவில்லை.

பதவிநீக்கம் செய்யப்பட்ட இரு ஜெனரல்களும் தற்பொழுது இராணுவத்தினரால் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என ஆருடம் தெரிவித்த காபூல் வானொலி இன்னும் ஒரிரு தினங்களில் ஜனாதிபதி ஸியாவை இவர்கள் கொலை செய்யத் திட்டமிட்டிருந்ததாகவும் அதன்மூலம் ஆட்சியைக் கைப்பற்ற முயற்சித்திருந்தாகவும் அறிவித்தது. (ஒ)

### பட்டினிசாவை உடனே தடுக்குக

வாஷிங்டன், மார்ச் 16

லெபனானில் பாலஸ்தீனிய அகதி முகாம்களில் பட்டினியால் மக்கள் சாவதை உடனடியாகத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

இவ்வாறு ஐ நா. தலைமைச் செயலர் - பரஸ் டி. கியூலர் லெபனான் பிரதம மந்திரிக்கு அனுப்பிய செய்தியில் வற்புறுத்தியுள்ளார்.

பாலஸ்தீனிய அகதிகளின் இன்னல்களைத் தீர்க்குமாறு ஸாம்பியா ஜனாதிபதி கெனத் கௌண்டாவும் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஒ)

## சீனாவில் 45 பேர் பலி! தொழிற்சாலை விபத்தில்

பீகிங், மார்ச் 16

சீனாவில் நேற்று அதிகாலை நடந்த பயங்கர தொழிற்சாலை வெடிவிபத்து ஒன்றில் 45 பேர் பலியானார்கள். 200க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

இந்தத் தொழிற்சாலை வெடிவிபத்தால் நான்கு பாரிய கட்டடங்கள் தகர்க்கப்பட்டுள்ளன.

விபத்து நடந்த சமயம் சுமார் 470 தொழிலாளர்கள் அங்கு பணிபுரிந்து கொண்டிருந்தனர்.

விபத்திற்கான காரணத்தைக் கண்டுபிடிப்பதில் பொலீஸார் ஈடுபட்டுள்ளனர். (ஒ)

### கானா அரசு புது முயற்சி

அக்ரா, மார்ச் 16

கானாவில் ஐந்து வருடங்களுக்கு முன்னர் அதிகாரத்தைக் கைப்பற்றிய அரசாங்கம் செல்வாக்கு மிக்க ஆதிவாசிகளின் தலைவர்களது ஆதரவைப் பெறுவதற்கு முயற்சி செய்து வருகின்றது.

பாரம்பரிய ஆட்சியாளர்களுடன் இளம் தீவிரவாதிகளும் இணைந்து செயல்படுவதற்கான புதிய வழிமுறைகளையும் கானா அரசு அறிவித்துள்ளது.

கானாவில் அரசியல் உறுதிப்பாட்டை மேம்படுத்துவதற்கு 1981 ஆம் ஆண்டு சதிப்புரட்சி மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றிய ஜெரி ரோலிங்ஸின் தற்பொழுது தீவிர கவனம் செலுத்தி வருகிறார். (ஒ)

### ஊனமுற்றோரும் வாழ வேண்டும்

லண்டன், மார்ச் 16

ஊனமுற்றவர்கள் சமுதாயத்தில் சமவாய்ப்புப் பெறச் செய்வதற்கு அவர்களுக்கு கூடுதல் சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும்.

பிரிட்டிஷ் பிரதமர் மார்கரட் தட்சர் இவ்வாறு தெரிவித்தார்.

உலக ஊனமுற்றவர்கள் தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்ட பொழுது அவர் இக்கருத்தை வெளியிட்டார்.

ஊனமுற்றவர்களின் மனோநிலை பாதிப்படையாது பராமரிக்க வேண்டியது ஒவ்வொரு நாட்டினதும் முக்கிய கடமைகளில் ஒன்றாகும் என உலகத் தலைவர்கள் பலர் தமது செய்திகளில் தெரிவித்துள்ளனர். (ஒ)

### மனித உரிமைகள் மீறலை கென்யா நிறுத்த வேண்டும்

நைரோபி, மார்ச் 16


கென்யாவில் மனித உரிமைகள் மீறப்படுவது அமெரிக்காவிற்கு ஆழ்ந்த வருத்தமளிக்கின்றது.

கென்யா ஜனாதிபதி டானியல் அரப்மோய் அமெரிக்க விஜயத்தை நேற்று முடித்துக் கொண்டு தாயகம் திரும்பும் பொழுது இவ்வாறு அமெரிக்க ஜனாதிபதி றேகன் தமது கருத்தை வெளியிட்டார்.

கென்யாவில் பொலீஸாரின் சித்திரவதைகள் அதிகரித்து வருகின்றன.

இரண்டு கோடி மக்களைக் கொண்ட அந்நாட்டில் மனித உரிமைகள் நீதியான முறையில் பேணப்படுவதையே அமெரிக்கா விரும்புகின்றது. கென்யா அரசாங்கம் மனித உரிமை மீறல்களை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியாது விடின் அமெரிக்காவின் தலையீடு தவிர்க்க முடியாததாகி விடும்.

இவ்வாறு றேகன் மேலும் எச்சரித்தார். (ஒ)



**பொய்யாமொழி**

குறள்:

விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர்.

பொருள்:

அறிவு விளங்குவதற்குக் காரணமான நூல்களைக் கற்றவரோடு கல்லாதவர் மக்களோடு விலங்குகளுக்கு உள்ள அவ்வளவு வேற்றுமை உடையவர்.

# காசநோய் முழுதாக குணமாக்கக் கூடியது

காங்கேசன்துறை, மார்ச் 17

மனித இனத்திற்கு ஆபத்தை விளைவிக்கக் கூடிய மிகக் கொடூரமான நோய்களில் காசநோயும் ஒன்று. மருத்துவ ஆலோசனைகளுக்குச் செவிமடுத்து மருந்துவருடன் நன்கு ஒத்துழைத்தால் இந்நோயில் இருந்து எவரும் பூரணமாக விடுபடலாம்.

மார்புநோய் நிபுணரும் இலங்கைத் தேசிய காசநோய் நிவாரணச் சங்க வட பிராந்தியத் தலைவருமான வைத்திய கலாநிதி சி. இந்திரராஜா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மாவிட்டபுரம் லயன்ஸ் கழகமும் வலிகாமம் வடக்கு காசநோய்த் தடுப்புச் சங்கமும் இணைந்து தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் கருத்தரங் ஒன்றை நடத்தினர்.

வைத்திய கலாநிதி இந்திரராஜா தொடர்ந்து பேசுகையில் காசநோயால் பீடிக்கப்பட்டவர் உடனடியாக மருத்துவ ஆலோசனைக் கையாண்டால் நாளடைவில் குணமாகலாம். அவர் இந்நோயை மற்றவர்களுக்குப் பரப்பாமல் இருக்க வேண்டிய அவசியத்தைவிட்டு சமுதாயம் விழிப்புடன் இருக்க வேண்டும் என்றார்.

யாழ் சுகாதாரக் கல்வி அதிகாரி திரு. கே. வைத்தீஸ்வரன் யாழ் சமூக சேவைத் திணைக்கள அதிகாரி திரு. அ. இராமநாதன், சுகாதாரக்கல்வி உத்தியோகத்தர் திரு. கு. நடராஜா, திரு. கே. தங்கவேலாயுதம் ஆகியோர் இந்நோய் பற்றிய பல விவரங்களை எடுத்துரைத்ததுடன் இந்நோய் பரவாமல் தடுப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு மக்கள் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். (இ-68)

## செய்திக்கொத்து

### சித்திரத்தேர்

திருநெல்வேலி, மார்ச் 17

திருநெல்வேலி ஸ்ரீபத்திரகாளி அம்பாள் தேவஸ்தானத்திற்கு புதிய சித்திரத்தேர் ஒன்று பல லட்சம் ரூபா செலவில் உருவாக்கப்பட்டு வருகின்றது.

பிரபல சிற்பாசாரியார் செல்வராஜா தலைமையின் கீழ் சிற்பாசாரியார் குழு ஒன்று இப்புதிய சித்திரத்தேரை உருவாக்கி வருகின்றது. (இ)

### நியமனமும் பாராட்டு விழாவும்

சாவகச்சேரி, மார்ச் 17

யாழ் அபிவிருத்திச் சபையின் புதிய பிரதிச் செயலாளராக கோப்பாய் உதவி அரசாங்க அதிபராக கடமையாற்றிய திரு எஸ். சபாபதிப்பிள்ளை நியமிக்கப்பட்டார்.

இவருக்கு அச்சுவேலி ப.நோ.கூ. சங்க இயக்குநர் சபைத் தலைவர் திரு. த. கமலநாதன் தலைமையில் பாராட்டு விழா ஒன்று நடத்தப்பட்டது. (இ-70)

### பாராட்டும் நல்வாழ்த்தும்

அச்சுவேலி, மார்ச் 17

இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு பதவி உயர்த்தப்பட்ட ஆறு தமிழ் கல்வி அதிகாரிகளுக்கும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் பாராட்டுக்களையும் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளது. (இ-11)

### வட்டுக்கச்சியில் கட்டட வேலை பூர்த்தி

கிளிநொச்சி, மார்ச் 17

வட்டக்கச்சி இலவச ஆயுள்வேத வைத்திய சாலைக்கென நிறுவப்பட்ட கட்டட வேலைகள் பூர்த்தி அடைந்துள்ளன. இதுவரை செல்வா வீதியில் இயங்கி வந்த இந்த வைத்தியசாலை சிவகந்தரம் வீதியில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத்திற்கு இடம் மாற்றப்படுகிறது.

இதேவேளை வட்டக்கச்சி சந்தையில் மீன் சந்தைக்கான கட்டடம் ஒன்று சுமார் ஒரு லட்சம் ரூபாவில் கட்டப்படவுள்ளது இதற்கான அத்திவாரக் கல் நடும் வைபவம் அண்மையில் நடைபெற்றது. (இ-76)

### ஆங்கிலப் பயிற்சி

மானிப்பாய், மார்ச் 17

உடுவில் இராமநாதன் கல்லூரியில் பாடசாலையை விட்டு வெளியேறிய மாணவர்களுக்கான முறைசாராக் கல்வியின் கீழ் தேசிய உயர் கல்வி ஆங்கிலப் பயிற்சி நெறி விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளது. (இ-90)

### தெய்வ வழிபாடே இன்றுள்ள ஒரே பாதை

சுன்னாகம், மார்ச் 17

தெய்வ வழிபாடுதான் இன்று எமக்குள்ள ஒரு சரியான பாதை

ஆசிரியை திருமதி. இருத்தணிகை நவரத்தினம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சுன்னாகம் இந்துமகளிர் நலன்புரிக்கழகம் வெள்ளிக்கிழமை தோறும் "சைவநீதி" இலவச வகுப்பை நடத்துகின்றது.

இவ்விழாவுக்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்ட ஆசிரியை திருமதி இ. நவரத்தினம் வகுப்பை ஆரம்பித்து வைத்தார்.

விழாவுக்கு கழகத்தின் தலைவி திருமதி. ப. யோகானந்தராசா தலைமை வகித்தார்.

சுன்னாகம் அம்பேத்கார் சனசமூக நிலையத் தலைவர் திரு. சபா. புஷ்பநாதன் திருமதி ஞா. சதாசிவரத்தினம், செயலாளர் திரு செ. குலசிங்கம் உட்படப் பலர் உரை நிகழ்த்தினர்.

திருமதி யோகராஜா நன்றியுரை வழங்கினர். (இ-27)

## வாசகர் திருமுகம்

### கிராமத்தின் அவல நிலை

நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 1970 ஆம் ஆண்டு ஒரு குடும்பத்துக்கு ஒரு ஏக்கர் விதம் குடியேற்றத் திட்டத்தின் கீழ் காணி வழங்கப்பட்டது.

பல இன மக்கள் வாழும் தண்டுவான் தெற்கு 17 ஆம் கட்டை கிராமம் பின்பு காலபோகத்தில் முல்லைத்தீவு மாவட்ட தண்டுவான் கிராமச் சேவையாளர் பிரிவோடு சேர்க்கப்பட்டு 1981 ஆம் ஆண்டு முல்லைத்தீவு அரசாங்க அதிபர் தலைமையில் கிராம அபிவிருத்திச் சங்கம் அமைக்கப்பட்டது.

ஆறு ஆண்டுகள் கடந்தும் ஒரு செயற்பாடுகளும் நடைபெறாத நிலையில் இருந்து வருகின்றது. இக்கிராமம் அபிவிருத்தி அடையாமல் இருப்பதற்கு சம்பந்தப்பட்டவர்களின் புறக்கணிப்பும் ஒரு காரணம் என்று கூறினால் தவறாகாது.

இக்கிராமத்தை அபிவிருத்திப் பாதையிலிட்டு செல்வதற்கு விவசாய விஸ்தரிப்பு நிலையம் பாடசாலை, உபதபாலகம், பொதுக்கிணறு, விளையாட்டு மைதானம், பொதுக்கட்டடம் ஆகியவை தேவை.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் அபிவிருத்திச் சங்கமும் கூடிய அக்கறை எடுத்து இவற்றைச் செய்வதன் மூலம் எமக்கும் எமது கிராமத்துக்கும் பெரும் தொண்டு ஆற்ற முடியும்

பொன். கந்தசாமி
நெடுங்கேணி.

## சமய சந்நிதிகளில்

### பொங்கல் விழா

திருநெல்வேலி, மார்ச் 16

திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானத்தின் வருடாந்த பொங்கல் விழா நாளை புதன்கிழமை வெகு சிறப்பாக நடைபெற இருக்கின்றது.

கடந்த 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு விளக்கு வைத்து பூசை ஆரம்பமாகியது குறிப்பிடத்தக்கது. (இ-ரி)

### புன்னாலைக்கட்டுவனில் கணபதி ஹோமம்

யாழ்ப்பாணம், மார்ச் 17

புன்னாலைக் கட்டுவன் ஆயாக்கடவை சித்தி விநாயகர் ஆலயத்தில் மகாகணபதி ஹோமமும் மிருத்தஞ்சய யாகமும் நாளை புதன்கிழமை காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகி மறுநாள் வியாழக்கிழமை பூர்த்தி பெறவுள்ளது.

நாட்டு மக்களின் நலன் கருதி தேவஸ்தான பரிபாலன சபையாரால் இந்த ஹோமம் நடத்தப்படுகின்றது (ஒ)

### கொடிதினம்

கல்முனை இந்து இளைஞர் மன்றம் கொடி தினம் ஒன்றை அண்மையில் வெற்றிகரமாக நடத்தியது. (இ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ELECTRO TECHNICAL INSTITUTION.
கல்வயல் சண்டிலிப்பாய்
புதிய பிரிவு:- சனி, ஞாயிறு
முற்பகல் 7 30—11 30
ஆரம்பம்:- 14 03-87
சகலஇன ரேடியோ, ரெலிவிஷன், வீடியோ, டெக் செய்முறையுடன் பயிற்சியளிக்கப்படும்.

# உதயன்

17 · 03 · 1987 செவ்வாய்க்கிழமை

PERSONAL OF, RADIO T-V CLASSES
புதிய பிரிவு திங்கள், புதன், வெள்ளி
முற்பகல் 9 30—11.30
ஆரம்பம்:- 09-03-87
விபரங்கட்கு,
எலக்ரோ டெக்னிக்கல் இன்ஸ்ரிடியூசன்
கல்வயல் சண்டிலிப்பாய்

## ஈரோஸ் போராளி வீரமரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 17
முல்லைத்தீவு தேவிபுரம் பகுதியில் நேற்று நடைபெற்ற நேரடி மோதலில் ஈரோஸ் போராளி ஒருவர் வீரமரணமடைந்தார்.

நடராசா கமலநாதன் (22 வயது) என்ற போராளியே வீரமரணமடைந்தவராவார்.

முருகண்டி புல்மோட்டை பகுதியில் நடைபெற்ற படையினருடனான நேரடி மோதலிலும், கிளேமோர் தியேட்டர் மீது நடத்தப்பட்ட தாக்குதலிலும் இந்தப் போராளி கணிச பங்காற்றினார் என ஈரோஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-10)

A/L 89
சனி, ஞாயிறு வகுப்பு
2 00- பிரயோக கணிதம்
3 00 - தூயகணிதம்
ஆரம்பம்-21 3-87
ஆசிரியர்:-
திரு. ரவிமோகன்
யாழ்ப்பாணம்
(வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்கும் இடையில்)

# நெடுங்கேணியிலிருந்து செட்டிக்குளத்திற்கு விரட்டப்படும் அகதிகள்

நெடுங்கேணி, மார்ச் 17
1977 கலவரத்தின் போது பெரிதும் பாதிக்கப்பட்டு மலையகத்திலிருந்து வந்து வவுனியா மாவட்டத்தில் அகதிகளாக குடியேறிய சுமார் 32 குடும்பங்களைச் சேர்ந்த நூற்றுக்கும் அதிகமானோர் சோதனைக்கு மேல் சோதனை அனுபவிக்க வேண்டிய நிலையில் இருக்கின்றார்கள்.

நித்தமும் உயிருக்கு அஞ்சிய நிலையில் தாங்கள் அனுபவித்து வரும் கஷ்டங்கள் குறித்து அவர்கள் வவுனியா அரச அதிபர், நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபர், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் திரு. எம். எஸ் செல்லச்சாமி ஆகியோருக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்திருக்கின்றனர்.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

1977ஆம் ஆண்டு இனக்கலவரத்தின் போது பாதிக்கப்பட்டு மலையகத்தை விட்டு வெளியேறி வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த செட்டிகுளத்தில் வந்து அகதிகளாகக் குடியேறினோம்.

1985 ஆம் ஆண்டு செப்டம்பர் 6 ஆம் திகதி ஊர்காவல் படை யினர், தேடுதல் என்ற போர்வையில் நடத்திய அட்டகாசத்தினால் பாதிக்கப்பட்டு வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த நெடுங்கேணியில் நெல் சந்தைப்படுத்தும் சபைக் கட்டடத்தில் அகதிகளாக வந்து குடியேறினோம்.

ஒன்பது மாதங்களுக்கு அரசாங்கம் நிவாரணம் வழங்கியது. பின் அது நிறுத்தப்பட்டது.

இதன் பின்னர் பட்டினியாலும் கடும் நோயாலும் நால்வர் உயிரிழந்தனர்.

ஒரே நேரத்தில் 187 பேர்கள் அம்மை நோயால் பாதிக்கப்பட்டு அதில் 63 பேர் கடுமையான பாதிப்புக்குள்ளாகி கஷ்டப்பட்டனர்.

பல துன்பங்களையும் துயரங்களையும் தாங்கி நெடுங்கேணியில் எமது உயிர்களை காப்பதற்காக காலத்தைக் கடத்தி வந்தோம்.

இந்த நிலையில் அரசாங்கம் எங்களை மீண்டும் மீண்டும் செட்டிகுளம் போகும்படி கட்டாயப்படுத்தியது.

"இராணுவத்தின் உதவியுடன் நாங்கள் வெளியேற்றப்படுவோம்; எங்களுக்கான அரச உதவிகள் நிறுத்தப்படும்' — என்றெல்லாம் எம்மை வற்புறுத்தியதுடன் அரச உதவிகளை இடை நிறுத்தினர்.

மருத்துவ உதவிகள், குடிநீர், மின்சார விநியோகம் அனைத்தும் நிறுத்தப்பட்டன.

இந்நிலையில் எங்களில் ஒரு பகுதியினர் அரச கட்டளைக்குப் பயந்து செட்டிகுளம் சென்றனர்.

அங்கு சென்ற சில நாட்களில் எங்களில் 11 பேர் இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்கள். இதற்கு பின்னரும் அங்குள்ள இருவர் இராணுவத்தால் கைது செய்யப்பட்டார்கள். அவர்களில் ஒருவர் சூட்டுக்கு இலக்காகி இறந்துள்ளார்.

இதனால் ஏனையோர் அங்கு செல்ல அஞ்சி நெடுங்கேணியிலேயே தொடர்ந்து இருந்து வருகிறோம். அரசாங்கத்தின் எந்த உதவியும் இல்லாது கடந்த ஒன்பது மாதங்களாக துன்பத்திலும் துயரத்திலும் எங்கள் வாழ்க்கை ஓடிக்கொண்டிருக்கிறது.

இந்த நிலையில் மேலும் இடி விழுந்தது போல மீண்டும் அரசாங்கம் எங்களை உடனடியாக செட்டிகுளம் போகும்படி கட்டாயப்படுத்துகிறது.

எங்களில் சிலருக்கு செட்டிகுளத்தில் காணிகள் கூட இல்லை. பாதுகாப்பும் அங்கு இடையாது.

எங்களை செட்டிகுளம் அனுப்பாது நெடுங்கேணியிலேயே குடியமர்த்த ஒழுங்குசெய்து தரும்படி மிக பணிவாக வேண்டுகிறோம்.

எங்களை உடனடியாக செட்டிகுளம் போகும்படி கட்டாயப்படுத்துவது அங்கு கொண்டுபோய் எங்களைப் பலி எடுக்கவே என்று நாங்கள் அஞ்சுகிறோம்.

— இப்படி அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது (உ-108)

## எரிபொருள்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)
வைத்திருக்கும் வாகன உரிமையாளர்களுக்கு மட்டுமே பெற்றோல், டீசல் என்பன விநியோகிக்கப்படும்.

எரிபொருள்களை எங்கே வைத்து வழங்குவது என்பது குறித்து யாழ் அரசாங்க அதிபரும், மாவட்ட இணைப்பு அதிகாரியும் இன்று கூடி ஆராய்ந்து முடிவு செய்வர்.

பாதுகாப்பு அமைச்சின் அழைப்பின் பேரில் அரச அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் நேற்றுக் காலை கொழும்பு விரைந்தார். அவர் இன்று காலை யாழ்ப்பாணம் திரும்புகிறார்.

இதே வேளை, வடபிராந்திய போக்குவரத்துச் சபை பஸ்களுக்கு பங்கீட்டு அடிப்படையை அகற்றி, எரிபொருள் தடை அமுலுக்கு வருவதற்கு முன்னர் இருந்தது போலவே எரிபொருள் வழங்கப்படும்.

எரிபொருள் தடை அமுலுக்கு வந்து இன்றோடு 74 நாட்களாகும் (அ)

## விசுவமடுப்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)
வீடுகளை விட மேலும் பல வீடுகளை சிப்பாய்கள் குண்டுவைத்துத் தகர்த்தனர்.

சிப்பாய்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்திலும் விமானத்தில் இருந்து போடப்பட்ட குண்டுகளினாலும் பலர் கொல்லப்பட்டிருக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.

எனினும் சுற்றிவளைப்பின்போது சில பொதுமக்கள் மட்டும் கைது செய்யப்பட்டதாகவும் தெரியவருகிறது.

நண்பகல் 12 மணியளவில் தேடுதல் நடவடிக்கையை நிறுத்திக்கொண்ட சிப்பாய்கள் பவள்கள் வாகனங்களில் ஏறி பரந்தன் ஆனையிறவு முகாம்களுக்கு வந்து சேர்ந்தனர்.

தேடுதல் நடவடிக்கையின்போது முகமூடி அணிந்த ஒருவரும் அங்கு அழைத்துச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## தமிழக...

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)
வித்துக்கொள்வார்.

திரு ஆர். எம். ஜெகதீசன் கவனித்து வந்த அலமைச்சுகளை போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. எஸ். முத்துசாமி மேலதிகமாகக் கவனித்துக்கொள்வார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

## விலை உயர்வு

சாவகச்சேரி, மார்ச்17
சாவகச்சேரிச் சந்தையில் வெற்றிலைக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டால் சாதாரண அளவிலான வெற்றிலை ஒன்று 25 சதமாக விற்பனையாகிறது.

பங்குனித் திங்கட் இழமைப் பொங்கலுக்கு ஆலயங்களுக்குச் சென்றவர்கள் அங்குள்ள சில்லறை வியாபாரிகளிடம் ... மேலும் ... டியிருந்ததாம். (உ-31)

## வயாவிளானிலிருந்து சிப்பாய்கள் முன்னேறும் முயற்சி முறியடிப்பு

பலாலி, மார்ச் 17
ஞாயிற்றுக்கிழமையும் நேற்றும் வயாவிளானிலும் தோலகட்டியிலும் வளலாய்ச்சந்தியிலும்புதிதாக அமைக்கப்பட்ட முகாம்களில் இருந்து கிழக்குப்பகுதியை நோக்கி முன்னேறுவதற்கு சிப்பாய்கள் எடுத்த முயற்சி புலிகளினால் முறியடிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் தோலகட்டி கிறிஸ்தவ ஆச்சிரமத்தில் முகாமிட்டுள்ள சிப்பாய்கள் தோலகட்டி வைரவ கோயிலடி வரை துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தபடி வந்து அங்கு பதுங்கியிருந்தனர்.

அவ்விடத்திலிருந்து சுமார் 50 யார் தூரத்தில் இராணுவச் சிப்பாய்களை எதிர் நோக்கிய நிலையில் போராளிகள் தமது காவல் அரணைப் பலப்படுத்தினர். இதனையடுத்து பதுங்கியிருந்த சிப்பாய்களை நோக்கிப் போராளிகளால் ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது. இதனால் சிப்பாய்கள் தோலகட்டி முகாமுக்குத் திரும்பிச் சென்றனர்.

நேற்றுப் பகல் சுமார் 11-30 மணியளவில் தோலகட்டிக்கு வடக்கே அமைந்த மேல்மாடிமுகாமிலிருந்து வடபகுதியிலுள்ள பற்றை மறைவுகளூடாக வளலாய்ப் பக்கமாக சிப்பாய்கள் வெளியேறினர்.

போராளிகளின் சென்றிப் பகுதிகளைச் சுற்றி வந்து பிடிக்கும் நோக்கில் வந்த சிப்பாய்களை சுமார் நூறு யார் தூரத்தில் நின்ற விடுதலைப் புலிகள் எதிர் கொண்டு தாக்கினர்.

சுமார் ஒன்றரை மணி நேரமாக நடைபெற்ற நேரடிமோதலுக்குப் பின் இராணுவத்தினர் தமது முகாமுக்குத் திரும்பிச் சென்றனர்

இராணுவ தரப்பில் பலருக்குப் படுகாயங்கள் ஏற்பட்டிருக்கலாமென நம்பப்படுகின்றது எனினும் அதஉறுதி செய்யப்படவில்லை.

போராளிகளுக்கு எவ்வித இழப்புமில்லை.

முகாமுக்குத் திரும்பிய சிப்பாய்கள் விடுதலைப் புலிகளின் சென்றி முனைகளை நோக்கி பதினைந்துக்கும் மேற்பட்ட ஷெல்களை ஏவினர்.

ஒட்டகப்புலம் சென் ஜேம்ஸ் பகுதிகளிலேயே இந்த ஷெல்கள் அதிகமாக விழுந்தன; (உ-119)

## ரெலோ முகாம்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)
செய்தனர்.

இப்படி யு என். ஐ. செய்தி ஸ்தாபனம் அறிவித்தது.

இந்த விபத்துக்கு நாசவேலை தான் காரணம் என்பதில் சந்தேகம் இல்லை என மத்திய ரயில்வே மந்திரி மாதவராவ் சிந்தியா தெரிவித்தார்.

அதிசக்தி வாய்ந்த குண்டு வெடித்ததினாலேயே இந்த விபத்து ஏற்பட்டிருக்கிறது. "Press Button" முறையிலேயே குண்டு வெடிக்க வைக்கப்பட்டிருக்கிறது. இதற்கு உபயோகிக்கப்பட்ட வயர் துண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன

விபத்துக் குறித்து விபரமான அறிக்கை ஒன்று ராஜ்ய சபையில் இன்று (செவ்வாய்க்கிழமை) சமர்ப்பிக்கப்படும்.

இந்தவிபத்துக் குறித்து விசாரணை செய்ய மாநில அரசின் அனுசரணையோடு ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்படும் - இப்படி அமைச்சர் மேலும் தெரிவித்தார். (உ)

## ரெலோவுக்கு..

(1-ம் பக்கத்தொடர்ச்சி)
லீஸ் மோப்ப நாய்கள், விபத்து நடந்த இடத்துக்கு அருகில் உள்ள இராமலிங்கம் என்ற கிராமத்துக்கு பொலீஸாரை கூட்டிச்சென்றன என்று செய்திகள் தெரிவித்தன. (உ-ஏ)

## இந்திய---

(1-ம் பக்கத்தொடர்ச்சி)
யாக வழங்கியிருக்கிறார்.

21 ஆம்திகதி மீண்டும் ஆய்வு

இம்மாதம் 21ஆம் திகதி பிரதமர் காந்தி இனப்பிரச்சினை நிலைமையை மீளாய்வு செய்யும்போது, நிர்ப்பந்தத்துடனான இந்த அணுகுமுறை பலனளித்துள்ளதா என்பதை பிரதமர் ஆராய்வார்

இதனிடையில் தமிழீழ விடுதலைப் புலிகள் புதிய யுக்தியுடன் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஆயுதப் படையினரின் திடீர் தாக்குதல்களை வெற்றிகரமாகச் சமாளித்து வருவது குறித்து புதுடில்லி திருப்தி தெரிவித்திருக்கிறது.

–இப்படி பிரபல அரசியல் விமர்சகர் ஜி.கே. ரெட்டி 'இந்து' நாளிதழில் எழுதியிருக்கிறார். (உ ஐ ஏ)

## ஜீ. சீ. ஈ. சோதனையில்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)
யடைந்துள்ளனர்.

கிருபராஜா வல்லவன், கிறிஸ்ரீன் ஜெயராஜா, விஜயந்தி விஜயரட்ணம், சுரபி நவரட்ணம் ஆகியோரே அந்த நான்கு மாணவிகளுமாவர்.

4 மாணவிகள் ஆறு பாடங்களில் விசேட சித்தி அடைந்துள்ளனர்.

88 வீதமான மாணவிகள் ஜீ. சீ ஈ உயர்தரம் கற்க தகுதியுள்ளவர்களாகக் கணிக்கப்பட்டுள்ளது

யாழ். இந்து

யாழ் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த 4 மாணவர்கள் 8 பாடங்களிலும் விசேட சித்தியடைந்துள்ளனர்.

கனகராஜா சிவகுமாரன், வேலாயுதபிள்ளை ரவிமோகன், முத்தையா சிவநேசன், கந்தரலிங்கம் சுரேஸ்குமார் ஆகியோரே அந்த நால்வருமாவர்.

மேலும் 5 மாணவர்கள் ஏழு பாடங்களிலும் விசேட சித்தியடைந்துள்ளனர்.

மொத்தம் 55 மாணவர்கள் 4 பாடங்களுக்கு ... யடைந்துள்ளனர். ... தோற்றியோரில் 91 வீதமான மாணவர்கள் ஜீ. சீ. ஈ. (உயர்தர) வகுப்புக்குத் தகுதி பெற்றிருக்கிறார்கள்.

வேம்படி

வேம்படி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த மாணவி வனஜராணி கண்ணுத்துரை எட்டுப் பாடங்களிலும் விசேட சித்தியடைந்துள்ளார்.

மேலும் 3 மாணவிகள் 7 பாடங்களிலும் விசேட சித்தியடைந்துள்ளனர்.

75 வீதமான மாணவிகள் ஜீ. சீ. ஈ. உயர்தர வகுப்புக்குத் தகுதியுடையவர்களாகின்றனர்.

மத்திய கல்லூரி

யாழ் மத்திய கல்லூரி மாணவன் கிறிஷ்ணபிள்ளை சதீஸ்காந்தன் எட்டுப் பாடங்களிலும் விசேட சித்தியடைந்துள்ளார்.

75 வீதமான மாணவர்கள் ஜீ சீ ஈ. உயர்தர வகுப்புக்கு தகுதியுடையவர்களாகக் காணப்படுகின்றனர்.

திருக்குடும்ப கன்னியர் மட ஆங்கிலப் பாடசாலையில் இரு மாணவிகளும், யாழ் இந்து மகளிர் கல்லூரியில் ஒரு மாணவியும் ஏழு பாடங்களில் விசேட சித்தியடைந்துள்ளனர். (உ-ஏ-7)

## மிகப் பிரபல்யமான கிரிக்கெட் வீரர் தெரிவு - 1987

இரண்டாவது வார இறுதியில் வாக்களிப்பு முடிவுகள்

| | பெயர் | | வாக்குகள் |
|---|---|---|---|
| (1) | எஸ். கிருபானந்தன் (கொக்குவில் இந்துக் கல்லூரி) | ... | 5,784 |
| (2) | பொ. பிரபானந்தன் (யாழ் இந்துக் கல்லூரி) | ... | 5,481 |
| (3) | க. டெரிமகான் (யாழ். மத்திய கல்லூரி) | ... | 2,964 |
| (4) | பி. புவனேந்திரகுமார் (மானிப்பாய் இந்துக் கல்லூரி) | ... | 2,892 |
| (5) | ஆ. வாகீசன் (சென் ஜோன்ஸ் கல்லூரி) | ... | 2,718 |
| (6) | கே. என் ரவிக்குமார் (யாழ் இந்துக் கல்லூரி) | ... | 1,230 |
| (7) | என். நித்தியரஞ்சன் (யாழ்ப்பாணக் கல்லூரி) | ... | 1,008 |
| (8) | ஆ. பி. சௌந்தரநாயகம் (சென் பற்றிக்ஸ் கல்லூரி) | ... | 777 |
| (9) | எஸ். கோகுலன் (கொக்குவில் இந்துக் கல்லூரி) | ... | 564 |

★ இவ்வார இறுதியில் முன்னணியில் திகழும் வீரருக்கு வாக்களித்து ரூபா 50/-ஐ பரிசாகப் பெறும் அதிஷ்டசாலிகள்

1. திரு. க சிவகுமார், தாவடி வடக்கு, கொக்குவில்
2. திரு. ரி. ரவிசங்கர், பிரம்படி, கொக்குவில்.

★ இவ்வார வாக்களிப்பில் பங்கு பற்றி ஒரு மாதத்துக்கு உதயன், சஞ்சீவி பத்திரிகைகளை இலவசமாக வாங்குவதற்கான பற்றுச்சீட்டைப் பெறும் இரு அதிஷ்டசாலிகள்:-

1. திரு நா. சுதாகரன், உடுவில் கிழக்கு, சுன்னாகம்.
2. திரு ஆர். இராஜேஸ்வரன், அம்பலவாணர் வீதி, உடுவில்.

(பரிசுகள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.)

அஞ்சலில் ஏற்படும் தாமதத்தை தவிர்ப்பதற்கு போட்டியில் கலந்து கொள்ளும் வாக்காளர்கள் தங்கள் முகவரியை விபரமாக எழுதவும்.

— கிரிக்கெட் போட்டிக் குழு




## BECON

(ஸ்ரீதர் சினிமா முன்பாக)
யாழ்
89 A/L

| | |
|---|---|
| பொருளியல் | -- திரு. வரதராஜன் |
| கணக்கியல் | -- திரு மரியதாஸ் |
| வர்த்தகம் | — திரு ரட்ணம் |
| அளவையியல் | -- திரு S.S மனோகரன் |
| இந்து நாகரிகம் | — திருமதி அருள் நங்கை |
| தமிழ் | — திரு. நாகேஸ்வரன் |
| புவியியல் | -- திரு பாலா - சன் |
| அரசியல் | — திரு ம. சனெல்ட் |
| கிறிஸ்தவ நாகரிகம் | -- திரு. பேசுரட்ணம் |

ஆரம்பம்: 21-03 87 சனி 10.00 மணி

89 A/L

| | |
|---|---|
| தூயகணிதம் | திரு. நல்லையா |
| பிரயோக கணிதம் | ,, |
| விலங்கியல் | திரு தம்பிராஜா |
| தாவரவியல் | ,, சர்வானந்தா |
| பௌதிகவியல் | ,, யோகானந்தா |
| இரசாயனவியல் | ,, பாபு |

ஆரம்பம்: 21 03 87 சனி 10.00 மணி

## விசேட சலுகை ரூபா 45/-ஐ சேமியுங்கள்

சித்திரைப் புத்தாண்டை முன்விட்டு எமது நிறுவனத்தில் கலர்பட சுருள்களை பிரதிபண்ண ஒப்படைக்கும் (பிரத்தியேக வாடிக்கையாளர்களுக்கு 21 வீதம் விசேட கழிவு இன்று முதல் சித்திரை 30ஆம் திகதி வரை வழங்கப்படும். இச்சலுகையைப் பயன்படுத்தி ஒரு படச்சுருளுக்கு ரூபா 45/-ஐ சேமிக்கத் தவறாதீர்கள். படப்பிரதிகள் யாவும் Hayleys Photoprint Ltd இல் பிரதியாக்கம் செய்யப்படும்

Agfa Collecting Centre
(Station Junction)
880 Hospital Road,
Jaffna.

## நீத்தார் பட்டியல்

### செல்லத்துரை தம்பித்துரை

தின்னவேலியை பிறப்பிடமாகக் கொண்ட செல்லத்துரை தம்பித்துரை காலமானார் இவர் பவளத்தின் அன்புக் கணவரும், கருணாதேவி, மங்களேஸ்வரி, கமலராணி, விமலராணி, ஜீவமலர் ஆகியோரின் அன்புத் தந்தையும், கிருஷ்ணமூர்த்தி, நவரட்ணம் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் தகனக் கிரியைகள் தாவடி தெற்கு கொக்குவிலில் இருந்து தாவடி மயானத்திற்கு 17 - 03 - 87 பிற்பகல் 2-00 மணிக்கு எடுத்துச்செல்லப்படும்.

இதை உற்றார் உறவினர் ஏற்றுக்கொள்ளவும்:

தகவல்:-
மனைவி, மக்கள்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி. இலக்கம் 15 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியீட்டு திகதி 17 - 03 - 1987 தொலைபேசி இல. 24205, 23079

Printed and Published by Uthayan Publications (Private) Ltd. 15, Second Lane, Power House Road, JAFFNA.

Registered as a Newspaper at the General Post Office, Under Number QJ / 94 /N /87. Telephone. 24205, 23079

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org